அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை. 6/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு.7
11, பெப்ருவரி, . 1988.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,
அரச கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கும்.

நீதித்துறை உத்தியோகத்தர்கள்/அரசாங்க உத்தியோகத்தர்கள்%
அரச கூட்டுத்தாபன ஊழியர்கள் அரசாங்கத்துக்குச் சொந்தமான
வாகனங்களைப் பயன்படுத்துதல்.

---

01. 15 ஆகஸ்ட் 1984 ஆம் தேதிய 264ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையுடன் மேற்கொண்டு சேர்த்துக் கொள்ளப்படுவதற்கானது.

02. அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழில் நிறுவனத்தைச் சார்ந்த தகுதி பெற்றதொரு அதிகாரி மாதாந்தம் 150/-ரூபாய் பணம் செலுத்துவதன் மூலம் சொந்த நோக்கங்களுக்காக அரசாங்க வாகனமொன்றை உபயோகிப்பதற்கு அனுமதிக் கப்படுகிறார் .

03. சாதாரண வேலை நேரத்துக்குப் புறம்பாகத் தினசரி வேலை செய்யும் நிர்ப்பந்தமுள்ள.அதே வேளையில் வசிப்பிடங்களை குறிப்பிடத் தக்க அளவு தூரத்தில் உடையவர்களுமான பின்வருவோர் வசிப்பிடத்துக்கும் வேலைத் தலத்துக்கும் இடையில் பிரயாணஞ் செய்வதற்கு அரசாங்க வாகனங்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள்

'பணிப்பாளர்' என்னும் பெயர் குறிப்பிடப்படாத அரசாங்க திணைக்கள மொன்றின் தலைவர்.

..3

வசிப்பிடத்துக்கும் வேலைத் தலத்துக்கும் இடையில் பிரயாணஞ் செய்வதற்கு அரசாங்க வாகனமொன்றைப் பயன்படுத்துவதோடு தனது சொந்த நோக்கங்களுக்காக ஆகக் கூடியது 600 மைல்கள் அல்லது மாதம் ஒன்றுக்கு 100/-ரூபாய் செலுத்துவதன் மூலம் 24 கலன் எரிபொருள் ஒதுக்கீட்டுடன் பிரயாணஞ் செய்யக் கூடியதான 15 ஆகஸ்ட் 1984 ஆம் தேதிய 264ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சலுகையை திணைக்களப் பணிப்பாளர் அனுபவிப்பவராயிருந்தால்.

அரசாங்க திணைக்களமொன்றின் இணைப் பணிப்பாளர்.

ஒவ்வொரு அரசாங்கக் கூட்டுத்தாபனத்திலும் ஒரு பொது முகாமையாளர் மட்டும்.

04. சொந்த நோக்கங்களுக்காக அரசாங்க வாகனத்தை உபயோகிப்பதற்கு அனுமதி பெற்றுக்கும் ஓர் உத்தியோகத்தர்/ஊழியர், சொந்தப் பிரயாணத்தின் போது அதனைச் செலுத்துவதற்கு அனுமதிக்கப்படுவதோடு உத்தியோகத்தர் விரும்பினால் உத்தியோகபூர்வமான பிரயாணத்துக்கும் இந்த அனுமதியை நீடித்துக் கொள்ளலாம்.

05. தனிப்பட்ட உபயோகத்துக்காக விடப்படும் உத்தியோக வாகனமொன்று அரசாங்கத்தினால் செலுத்தப்படும் அங்கசம்பூரணமான காப்புறுதிப் பத்திரத்தைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

06. அரசாங்க வாகனமொன்றை சொந்தப் பிரயாணத்துக்கென பயன்படுத்தும் ஓர் உத்தியோகத்தர்/ஊழியர் அந்த வாகனத்தைத் தனது வசிப்பிடத்தில் நிறுத்திக் கொள்வதற்கு அனுமதிக்கப்படலாம்.

07. இந்த ஏற்பாடுகள் 06.01.1988ஆம் திகதி முதல் செயற்படத் தொடங்கும்.

ஒப்பம்: டி.பி.ஜ.பி.எஸ. சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.